# முன்னூதாரண கிராமமாகிய கூத்தம்பாக்கத்திலிருந்து சில பாடங்கள்

******

**“தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று”**

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து கொண்டிருப்பர் திரு. இளங்கோ ரங்கசாமி அவர்கள்.

பிறந்தோம், வளர்ந்தோம் என்று பத்தோடு பதினொன்றாக வாழாமல் “இவனா” என்று தலை நோக்கி வாழ்வது சிறப்பு அப்படி கிராம மக்களின் நலனுக்காக தன்னையே அர்ப்பனித்துக் கொண்டவர் இவர். அடிப்படை வசதியே இல்லாத “கூத்தம்பாக்கத்தின்” வளர்ச்சிக்காக பாடுபட்டு அதை ஒரு முன்னுதாரண கிராமமாக மாற்றியவர். இந்த கூத்தம்பாக்கத்தின் கதையானது மற்ற கிராமங்களின் வளர்ச்சிகாகவும், மற்ற கிராம மக்கள் பயனடைவதற்கும் மொழி ஆக்கம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து சுமார் ஒரு மணி நேரம் தேசிய நெடுஞ்சாலையில பயணம் மேற்கொண்டால் நாம் அடைய கூடிய இடமானது கூத்தம்பாக்கம் என்னும் ஊர். கூத்தம்பாக்கம் ஏழு குக்கிராமங்களை உள்ளடக்கியது. வடமேற்கு பகுதியான கூத்தம்பாக்கத்தல், நிலங்கள் நல்ல மண் வளத்துடன் இருப்பதாலும் மழை பெறும் பகுதியாக இருப்பதால் மக்கள் விவசாயம் மேற்கொள்கின்றனர். ஆனால் தென் கிழக்கு பகுதியில் மிக உயர்ந்த கட்டிடங்களை காணலாம். இப்பகுதி சிறிது சிறிதாக நகரமயமாகி வருகின்றது.

1990 ன் ஆரம்பத்தில் கூத்தம்பாக்கத்தில் போதிய சாலை வசதிகளோ, உள்கட்மைக்புகளோ இல்லை. வாழ்வாதாரங்கள் பாதுகாப்பற்றவையாக இருந்தன. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக குடும்ப வன்முறை வழக்குகள் பதிவாகியிருந்தன. இப்பகுதி கள்ள சாராயம் காய்ச்சி கள்ள சந்தையில் விற்கும் கூடமாக இருந்தது.

இந்த சூழ்நிலையில் இளங்கோ ரங்கசாமி அவர்கள் இறுதியாக தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு தனது கிராமத்திற்கு திரும்பினார். 1996 இல் அவர் ஒரு சுயேட்சை வேட்பாளராக பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிட முடிவு செய்தார். இளங்கோ வெற்றி பெற்று கிராம தலைவர் ஆனார். மேலும் கிராம வளர்ச்சிக்கு பாடுபட்டார். அவர் அடிப்படை திட்டங்களை அறிமுகப்படுத்தி, உள்ளூர் மக்களை அணி திரட்டி கிராமத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சித்தார். அவர் முதலில் சட்டவிரோதமான மதுபான உற்பத்தி, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சாதி பாகுபாடு ஆகியவற்றை ஒழிக்க முயற்சித்தார். ஆனால் மக்கள் அனைவருக்கும் நல்ல வீடுகள் வழங்குவது, சுய உதவி குழுக்களை உருவாக்குதல், பஞ்சாயத்து திட்டங்கள் மூலமாக வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், உள்ளூர் வளங்களின் அடிப்படையில் வாழ்வாதாரங்களை உருவாக்குவதல், பற்றாக்குறைக்கு பதிலாக ஏராளமான கொள்கைகளின் அடிப்படையில் ஒரு பொருளாதார த்தை உருவாக்க வேண்டும் என்பதே அவருடைய தொலைநோக்கு இலட்சியமாகும்.

ஒரு பொறியாளராக இருந்த இளங்கோ, பொது இடம் மற்றும் குடும்பங்கள் ஆகிய இவ்விரண்டிற்கும் ஆற்றல் சேமிப்பு தீர்வுகளை தொடங்கினார். தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்து தலைவர்கள், நல்ல நடைமுறைகளை பரப்புவதற்கும், பன்னாட்டு திறனை கற்று அதை வளர்த்துக்கொள்வதற்கும் **“பஞ்சாயத்து கழகம்”** என்னும் ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. இளங்கோ ஒருவரே துவக்கத்தில் இருந்தபோதிலும், கூத்தம்பாக்கம் அனுபவம் பேச்சுவார்த்தை மற்றும் கருத்தொற்றுமைகளின் அடிப்படையில் அமைந்திருக்கிறது.



**இளங்கோ**

**முறைகள்**

இந்த அறிக்கை நாங்கள் நான்கு நாட்கள் ஆகஸ்ட் 2014 25 முதல் 28 வரை கூத்தம்பாக்கம் கிராமத்திற்கு பயணம் செய்ததை சார்ந்து இருக்கின்றது. மேலும் ஜனவரி 2017ல் 18 முதல் 20 வரை கூடுதல் பயணம் மேற்கொள்ளப்பட்டது. நாங்கள் இளங்கோ அவர்களிடம் அவருடைய கொள்கைகளை பற்றி கேட்டு அறிந்து கொண் டோம்.

நாங்கள் அங்கே தங்யிருந்தபொழுது, கூத்தம்பாக்கம் கிராமத்தில் சமத்துவ புரத்தை பார்வையிட்டோம். இது ஒரு ஓருங்கிணைந்த வீட்டு திட்டமாகும். நாங்கள் பல உற்பத்தி ஆலைகளை பார்த்தோம். அங்கு வேலையில் உள்ள மக்களை சந்தித்து பேசினோம். மேலும் நாங்கள் கூத்தம்பாக்கம் போன்ற அருகாமையில் உள்ள கிராமங்களுக்கு சென்று பார்த்தோம். அங்குள்ள தொழிலாளர்கள், குடியிருப்பாளர்கள் மற்றும் உள்ளூர் அரசியலில் ஈடுபட்டிருந்த மக்களை பேட்டி எடுத்தோம். ஒவ்வொரு நாளும் இளங்கோ உள்ளூர் மற்றும் தேசிய வளர்ச்சியில் தனதுகருத்துக்களை பகிர்ந்துகொண்டார். இந்தஅறிக்கை ‘‘ராடிக்கல் இக்கலாஜிக்கல் டெமாகரசி’’ மற்றும் ‘‘ஆல்டர்நேட்டிவ் பிஃரேம் ஒர்க்ஸ்ஸை’’ நோக்கி பார்க்கின்றது என்று கல்பவிருக்ஷ் இதை தெரிவித்தார்.

## இளங்கோவின் பயணம்

இளங்கோ ரங்கசாமி அவர்கள் கூத்தம்பாக்கத்தில் பிறந்து வளர்ந்தவர். அவர் தன்னுடைய மேற்படிப்பை சென்னையில் உள்ள ‘‘இன்ஸ்டியூட் ஆப் கெமிக்கல் டெக்னாஜியில்’’ ல் படித்தார். அவர் தன்னுடைய பட்ட படிப்பை முடித்தபின்னர், ஒரு பொறியாளராக ஆயில் இந்தியா கம்பெனியில் வேலை செய்தார். வார இறுதியில் அவர்தன்னுடைய கிராமத்திற்கு சென்றார். அவர் தனது கிராமத்தில் உள்ள மக்களை மிகவும் நேசித்தார். அங்குள்ள வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்த விரும்பினார். 1994ல் அவர் தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு கூத்தம்பாக்கத்திற்கு திரும்பமுடிவு செய்தார். அவரது தந்தை அவருக்கு ஒரு ஏக்கர் நிலத்தை கொடுத்து உதவினார். அவருடைய வாழ்வாதாரத்திற்காக தொழில்களுக்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

இளங்கோ தலித் மக்களால் ஆதிக்கம் நிறைந்த ஒரு கிராமத்தில் வளர்ந்தார். பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் தலித்துக்களுக்கு எதிரான பாகுபாடு களை கண்டு அவர் மிகவும் பாதிக்கப்பட்டார். அவரும் ஒரு தலித் ஆவார். ஆனால் சலுகைகளைப்பெற்ற பல்லார் சாதியை சேர்ந்த தலித் ஆவார். அவரது தந்தை பள்ளி ஆசிரியராக பணியாற்றினார். இளங்கோ, மேற்படிப்பிற்காக தன்னுடைய கிராமத்தை விட்டு சென்றபின்னர், அங்கு மனைவியை அடித்தல், சாதி பாகுபாடு மற்றும் வறுமைபோன்ற பிரச்சினைகளை தீர்க்கும் இயக்கங்களினாலும் தலித் மற்றும் இடது சாரி இயக்கங்களினாலும் ஆழமாக ஈர்க்கப்பட்டார். அவர் சமூக நிலைமையை மாற்றி வளர்ச்சியை கொண்டு வரவேண்டும் என்று எண்ணினார். அவர் வளர்ச்சி என்றால் பெரியசாலைகள் மற்றும் பல தொழிற்சாலைகளை அமைப்பது என்று நினைத்திருந்தார்.

தனது கிராமத்திலுள்ள பிரச்சினைகளை இளங்கோ அறிந்து இருந்ததினால் ஆவலுடன் ஊருக்கு திரும்ப வேண்டும் என்று இருந்தார். மனைவியை அடித்தல், சட்டவிரோதமான மதுபானம், குடிபோதையில் இருக்கும் ஆண்கள் கிராம மக்களை தாக்குதல், அரசியல் வாதிகளின் ஊழல், வறுமை, சாதி அடிப்படையிலான

வேறுபாடுகள் மற்றும் கிராமத்தில் பொதுவான பின்தங்கிய நிலை ஆகிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை கண்டுபிடிக்க வேண்டும் என்று முற்பட்டார். நகரங்களுக்கு மக்கள் இடப்பெயர்வு செய்வதினால் அது கிராமபுற வாழ்வில் எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது என்று கவலையுற்று இருந்தார். ஒரு வலுவான உள்ளூர் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டிய அவசியத்தை அவர் உணர்ந்தார். இது வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதோடு மட்டும் அல்லாமல் மக்களுக்கு தேவையான வேலை வாய்ப்பை அளிப்பதாக இருக்கும் என்று கருதினார்.

ஒரு முன்னுதாரண கிராமத்தை உருவாக்குவது எப்படி என்று புரிந்துக் கொள்ள இளங்கோ, மதுரை மாவட்டதில் உள்ள குன்றக்குடி என்ற கிராமத்திற்கு சென்றார். இங்கே, அவர் அடிகளார் என்பவரால் ஈர்க்கப்பட்டார். இளங்கோவின் கருத்துப்படி அவர் ஒரு இடது சாரி துறவி ஆவார். குன்றக்குடியில், வறுமை மற்றும் வேலையின்மை ஆகிய பிரச்சினைகளை தீர்க்க பேச்சு வார்த்தை எவ்வாறு, பல்வேறு வகையான மக்களை ஒன்று சேர்த்தது என்பதை இளங்கோ கண்டார். மேலும் மக்களின் கருத்து மற்றும் அவர்களுடைய சொந்த வளர்ச்சியில் உள்ளூர் ஏழைகளின் பங்கேற்பு எவ்வளவு மதிப்புள்ளது என்பதை உணர்ந்தார். வறுமையை ஒழிப்பதற்கு உள்ளூர் திறன்களை வளர்ப்பதற்கான அவசியத்தை அவர் புரிந்து கொண்டார். குன்றக்குடியில் "பங்கேற்பு ஜனநாயகம்" தொடங்குவதற்கு அடிகளார் உதவினார். 1992ம் ஆண்டில் நரசிம்மராவ் அரசாங்கத்தின் கீழ் இந்தியா அரசியல் அமைப்பில் 73 வது சட்ட திருத்தம் வந்தது. இளங்கோ, பங்கேற்பு வளர்ச்சியை ஊாக்குவிக்க, அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மிகப்பெரிய வாய்ப்பாக இதை கருதினார்.

கிராமத்தை மாற்றுவதற்கு அவருக்கு நிறைய காலம் தேவைப்பட்டது. எனினும் சமூக வேலையில் நேர்மையான விளைவு அநேக மக்களையும் மற்றும் மீடியாக்களின் கவனத்தையும் ஈர்த்தது. இது மாவட்ட நிர்வாகத்தின் சில ஆரம்ப எதிர்ப்பை மேற்கொள்ள உதவியது. இருப்பினும் தலித்துகளுக்கும், தலித்

அல்லாதவர்களுக்குமிடையே பேச்சு வார்த்தை இல்லாமல் இது சாத்தியமில்லை. இந்த செயல்முறை எளிதானதும் அல்ல. கிராமத்திருலுள்ள தலித்மக்களை மேம்படுத்துவதன் மூலம் வளர்ச்சி சாத்தியம் என்று தலித் அல்லாதவர்களை சமாதானப்படுத்த பலநாட்கள் எடுத்தது.

இளங்கோ ஒரு காந்திய வாதியாக கருதப்பட்டாலும் அவர் இதை மறுக்கிறார். ஆனால் காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். அவருடைய பலத்தின் ஆதாரம் காந்தியின் ''**சத்திய சோதனை**'' ஆகும். காந்தியின் கொள்கைகளை பயன்படுத்துவதன் மூலம் கிராமம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் தீர்க்கப்படலாம் என்று அவர் நினைத்தார். எனினும், அவர் பல சிந்தனையாளர்கள் மற்றும் அரசியல் கோட்பாடுகள் மூலம் ஈர்க்கப்பட்டார். உதாரணமாக ஜெ. சி. குமரப்பாவின் பணியான ''கிராம வலையமைப்பு பொருளாதார மாதிரியை'' இளங்கோ ஆதாரித்தார். அவர் மார்க்சிஸ்சத்தாலும் ஈர்க்கப்பட்டார். இளங்கோவின் வீட்டில் அவரை கவர்ந்தவர்களின் படங்கள் உள்ளன.

## <u>பஞ்சாயத்து தலைவர் (1996 – 2006)</u>

1996ல், இளங்கோ தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை. ஏனெனனில், அவர் யாரிடமும் சென்று வாக்குகளை கேட்க விரும்பவில்லை. இருப்பினும் சமூக ஆதரவு மற்றும் இட ஒதுக்கீடு காரணமாக அவர் தேர்தலில் வெற்றி பெற்று தொடர்ச்சியாக இரண்டுமுறை சர்பான்ச் ஆனார். சர்பான்ச் ஆன இவர், தனது கிராமத்தில் உள்ளூர் தன்னுரிமை அரசை செயல்படுத்த முயன்றார். அது இந்தியாவில் முன்னூதாரண கிராமமாக மாறியது.

## <u>பெண்களுக்கு ஆதரவாகவும் சட்ட விரோதமான மது பானத்திற்கு எதிராகவும் இளங்கோவின்செயல்பாடு.</u>

பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு பின்னால் சட்ட விரோதமான மதுபானம் முக்கிய காரணம் என்று இளங்கோ நம்பினார். பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சாதி பாகுபாடு ஆகியவைகள் கிராமத்தின் வளர்ச்சியை தடுத்தது.

சர்பான்ச் ஆன இவர், மது கள்ளசந்தையை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்று விரும்பினார். சட்ட விரோதமான மதுபான உற்பத்தியாளர்கள் இளங்கோவை கொலை செய்திடுவோம் என்று அச்சுறுத்தினர். தனது பெற்றோரின் ஆதரவோடு இந்த கடினமான காலத்தை அவர் வென்றார்.

மதுபான உற்பத்தியாளர்களிடம் பேச்சுவார்தையின் மூலம் சட்ட விரோதமான மதுபானக்கடைகள் தடை செய்யப்பட்டன. சட்ட விரோத மதுவை உற்பத்தி செய்வதை நிறுத்திவிட்ட வீடுகளுக்கு மற்ற வேலை வாய்ப்புகளை இளங்கோ வழங்க வாக்குறுதி கொடுத்தார். கிராமத்தின் வளர்ச்சிக்காக பலவேலைகள் உருவாக்கப் பட்டன.

## வேலையின்மைக்கு தீர்வு

சட்டவிரோதமான மதுபானத்தை ஒழித்தபின்னர், அடுத்த பிரச்சினையான வேலையின்மையை தீர்க்க வேண்டியிருந்தது. கிராமத்தில் சிறிய உற்பத்தி மையங்கள் உருவாக்கப்பட்டன. உதாரணமாக, கிராமபுற பெண்களுக்கு, உதிரி பாகங்களை ஒன்று சேர்ப்பது அல்லது டைல்ஸ் தயாரிப்பில் வேலைகள் அளிக்கப்பட்டன. கிராமத்தின் முக்கிய நோக்கம் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு தொழிற்துறையை மேம்படுத்துவதாகும். இளங்கோ, கிராமத்தின் சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தினார். சாலைகள் மற்றும் கழிவு நீர் கால்வாய்களை உருவாக்க உள்ளூர் தொழிற்சாலைகளில் இருந்து கிடைக்கும் கழிவு பொருட்களான கற்கள், சரளை, கிரானைட் போன்றவற்றை அவர் பயன்படுத்தினார். இது கிராமங்களுக்கு சில லட்சங்களை சேமிக்க உதவியது.



**உற்பத்தி வேலை செய்கின்றனர்**

இளங்கோ நாடு முழுவதும் பயணம் செய்து கிராமபுற வளர்ச்சியை ஆய்வு செய்தார். பொருளாதார நடவடிக்கை வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கும் என்று அவர் உண்மையிலேயே நம்பினார். இளங்கோ பஞ்சாயத்து தலைவர் என்ற நிலையிலிருந்து விடுபட்ட பின்னரும் கூட “கிராமம் நிர்ணயத்திற்கான நம்பிக்கை” உரையாடலுக்கும் மற்றும் கற்றுக்கொள்ளுதலுக்கும் ஊக்கம் அளித்தது. பால், நிலக்கடலை, தேங்காய், சணல், தோல், கைத்தறி நெசவு, பேக்கரி பொருட்கள், மண்ணெண்ணெய் பர்னர்கள், ஹாம்மாக்ஸ் மற்றும் பல்வேறு சோப்பு வகைகள் போன்ற எளிய உற்பத்தி பொருட்களை இக்கிராமம் ஊாக்குவித்தது. இத்தகைய செயல்களினால் பலர் வேலைகளை பெற்றனர். கூத்தம்பாக்கத்தில் உள்ள 1050 குடும்பங்களில் சுமார் 140 குடும்பங்களிலிருந்து குறைந்த பட்சம் ஒரு அங்கத்தினர் இந்த மையங்களில் வேலை செய்கின்றனர். சராசரியாக, ஒரு குடும்பத்தின் மாத வருமானம் ரூ.20000 – 25000 மாக உயர்ந்துள்ளது. 1990ம் ஆண்டின் பிற்பகுதியில் ரூ.3000–4000லிருந்து பெரிய அதிகரிப்பு. உற்பத்தியில் நேரடியாக பணியாற்றப்பட்ட 150 பேரில், 120 பேர் தலித்துக்கள் மற்றும் 112 பேர் பெண்கள் ஆவார்கள். இந்த வேலைகள் கிடைத்த பின்னர் கிராம மக்கள் அதிக நம்பிக்கையுடன் வாழ்கின்றனர்.

## புதுமையான கட்டுமானமும் மற்றும் வீட்டு வசதி

அடுத்த சவால் ஏழைகளுக்கு நல்ல வீடுகள் வழங்க வேண்டும் என்பதே. தலித்துகள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக்கண்டு கவலைப்பட்டார். தலித் மக்களின் வன்முறைக்கு வறுமை மற்றும் பாகுபாடே காரணம் என்று தலித் அல்லாத கிராம மக்களுக்கு புரியவைத்தார். தலித் குடியிருப்புகளில் தண்ணீர், கழிவு நீர் கால்வாய்கள் மற்றும் பள்ளிகளை மேம்படுத்த இளங்கோ விரும்பினார். இதற்காக பஞ்சாயத்து நிதியிலிருந்து ஒரு பெரியதொகை வழங்கப்பட்டது.

1997 முதல் 1998 வரை கூத்தம்பாக்கத்தில் உள்ள நீர் நிலைகளில் தூர்வார் பணி மற்றும் அந்நிலைகளை ஆழமாக்குகின்ற பணிகள் மேற்க்கொள்ளப்பட்டன. அரசாங்கம் கொடுத்த நிதியின் மூலம் இப்பணிகள் செய்யப்பட்டன. மழை நீர் வடிகால்கள் கட்டப்பட்டன. இது கிராமத்தில் உள்ளவர்கள் மழை நீரை சேகரித்து அதை மீண்டும் பயன்படுத்த உதவியது. மாற்றுக்கட்டுமான முறைகள் மற்றும் அழுத்தப்பட்ட மண் தொகுப்புகள் போன்ற பொருட்கள் உபயோகப்படுத்தப்பட்டன. இந்த எளிய யோசனை புதியது அல்ல, ஆனால் மறு பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மண் தொகுப்புகள் உள்ளூர் மண்ணை பயன்படுத்தி செய்யப்பட்டன. மற்ற இடங்களில் கல் மலிவாக இருக்கலாம். இந்த வடிகால்கள் செங்கற்கள் மற்றும் மரக்கட்டகளை பயன்படுத்தி கட்டப்பட்டன. இந்த எளிய நுட்பங்களை பயன்படுத்தியதன் மூலம் இக்கிராமம் பணத்தை சேமித்தது மட்டுமல்லாமல் அங்குள்ள உள்ளூர் மக்களுக்கும் வேலைவாய்ப்பும் வழங்கியது. இளங்கோ கூறியது போல, உண்மையான மதிப்பு, கண்ணியமான வீடு மற்றும் கழிப்பறைகளை கொடுப்பதில் தொடங்குகிறது. புதிய வீடுகளில், புதிய செங்கல் கழிப்பறைகள் வழங்கப்பட்டன. 12,500 ரூபாய்க்குள் கட்டக்கூடிய ஒரு கழிப்பறையை அறக்கட்டளை உருவாக்க விரும்பியது. 2005 ம் ஆண்டிற்குள் கூத்தம்பாக்கத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் சரியான வீடுகள் இருந்தன.

2000ம் ஆண்டில், கிராமத்தில் சமத்துவத்தை ஊக்குவிக்க ‘‘சமத்துவபுரம்’’ என்று ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. அது பலவகையான சாதியை சார்ந்த மக்களின் வீட்டுவசதி குடியிருப்பை உருவாக்கியது. வீடுகளின் சுவர்கள் வெவ்வேறு சாதிகளை உடைய குடும்பங்களால் பகிர்ந்து கொள்ளப்பட்டன. வீட்டு குடியிருப்பில் தலித்துகள் மற்றும் தலித் அல்லாதோர் பல ஆண்டுகளாக தங்கள் வீட்டின் சுவர்களை பகிர்ந்துகொண்டு வாழ்ந்து வருகின்றனர். புதிய வீடுகள், மண் தொகுப்புகளின் தொழிற்நுட்பம் மற்றும் உள்ளுர் பொருட்களின் உதவியோடு கட்டப்பட்டன. கட்டுமான பணிகளுக்காக சுமார் 160 குடும்பங்கள் ஒரு வருடத்திற்கு வேலையில் ஈடுபடுத்தப்பட்டன.

இத்தகைய இரட்டை குடியிருப்புகளாக, 50 வீடுகள் சமத்துவபுரத்தில் உள்ளன. ஒவ்வொரு வீட்டிலும், உயர் சாதி குடும்பத்தினர், தாழ்த்தப்பட்ட சாதி குடும்பத்துடன் தங்களது வீட்டின் சுவர்களை பகிர்ந்து கொள்கின்றனர். வீடுகளை வழங்கிய 100 குடும்பத்தையும் இளங்கோ தனிப்பட்ட முறையில் சந்தித்தார். அவருடைய தனிப்பட்ட ஈடுபாடு இந்த யோசனையின் வெற்றிக்கு வழி வகுத்தது. இப்பொழுது, சமத்துவபுரத்தில் ஒரு நூலகம், விளையாட்டு மைதானம் மற்றும் ஒரு அங்கன் வாடி உள்ளது. இங்கு கோவில் இல்லை. ஏனென்றால் அது பாகுபாட்டிற்கு வழி வகுக்கும் இன்று மக்கள் ஒன்றாக வாழ்கின்றனர், உணவை பகிர்ந்துகொள்கிறார்கள், கலப்பு திருமணங்களுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள்.



**சமத்துவபுரம்**

அரசாங்கத்தின் **"சமத்துவபுரம்"** என்னும் திட்டத்தின் கீழ் இந்த யுத்தி கையாளப்பட்டது. ஆனால் அது வெற்றியடையவில்லை. குடும்பங்கள், ஒழுங்கு முறையின்றி வீடுகளில் வைக்கப்பட்டதினாலும், ஆலோசனை மற்றும் பேச்சுவார்த்தையின்மையினாலும் இத்திட்டம் தோல்வி பெற்றது என்று இளங்கோ கருதினார்.

## சூரிய மின்னாற்றல்

இந்தியாவின் எந்த கிராமத்திற்க்கும் ஆற்றலை பொருத்தவரையில் தன்னிறைவு முக்கியம். கூத்தம்பாக்கத்தில் சி.எஃப்.எல் அடிப்படையிலான விளக்குகளை அவர்களே உற்பத்தி செய்தனர். அவர்கள் வெளியிலிருந்து பல்புகளை மட்டும் வாங்கினார்கள். கூத்தம்பாக்கத்தில் 320 தெருவிளக்குகள் உள்ளன. இதன் விளைவாக, ஒரு மாதத்திற்கு ரூ.15000/– மின்சாரம் சேமிக்கப்பட்டது. இளங்கோ அவர்கள், குடும்பங்களுக்கு மின்னனு சாதனங்களை ஒரு தொகுப்பாக வடிவமைத்துள்ளார். இதில் ஒரு சூரிய மின்தகுடு, ஒரு மின் விசிறி, நான்கு விளக்குகள் மற்றும் ஒரு சார்ஜர் இருந்தன. சூரிய மின் ஆற்றலை பயன்படுத்தி இயங்கும் ரிக்ஷா மற்றும் நெசவு இயந்திரங்களை தயாரிக்க விரும்பினார். கூத்தம்பாக்கத்தில், சூரிய மின் ஆற்றலை பயன்படுத்தும் இந்த

முயற்சி மக்களின் பணத்தை சேமிக்க உதவியதோடு மட்டுமல்லாமல், பல கிராம வாசிகளுக்கு வேலை வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

## பஞ்சாயத்து கழகம்

2003ம் ஆண்டில், சமூக அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் மக்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக பஞ்சாயத்து கழகத்தை இளங்கோ தொடங்கினார். தமிழ்நாடு சட்டப்பணிகள் மற்றும் பஞ்சாயத்துக்கள் பற்றி உறுப்பினர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டது. பஞ்சாயத்து தலைவர்கள் சட்டங்களைப்பற்றி அதிக அறிவை பெற்றவர்களாக இருந்தால், மேலும் மாற்றங்கள் ஏற்படலாம் என்று கருதினார். இந்த அறிவை பரப்புவதில் பஞ்சாயத்து கழகம் ஒரு பயனுள்ள கருவியாகும். திட்டமிடல், சமூக நீதி, நிலையான தொழிற்நுட்பம், பேரழிவு மேலாண்மை, அரசு திட்டங்கள், நிதி, சுகாதாரம் மற்றும் கிராமபுற பொருளாதாரம் ஆகியவை பஞ்சாயத்து கழகத்தில் பயிற்றுவிக்கப்பட்ட பாடங்களில் சில.



**பஞ்சாயத்து கழகம்**

## வலையமைப்பு பொருளாதாரம்

இளங்கோ ‘‘வலையமைப்பு பொருளாதாரம்’’ என்று அழைக்கப்படும் பொருளாதாரத்தை உருவாக்கவிரும்பினார். 1990ம் ஆண்டில் கூத்தம்பாக்கத்தில் நடந்த ஆய்வில், கிராமத்தில் உள்ளவர்கள் ஒவ்வொரு மாதமும் ரூ.60லட்சம் மதிப்புள்ள பொருட்களை வாங்கியதாகவும், ஒவ்வொரு மாதமும் ரூ.50லட்சம் மதிப்புள்ள பொருட்களை உருவாக்கும் ஆற்றலை உடையவர்கள் என்றும் காட்டியது. இளங்கோ, கிராமம் தன்னிறைவு அடைந்து, மற்ற பொருளாதாரங்களை சார்ந்திருக்க வேண்டியதில்லை என்பதை உணர்ந்தார். இந்த அணுகுமுறை வலையமைப்பு வளர்ச்சி பொருளாதாரம் என்று அழைக்கப்படுகின்றது. இது கிராம வாசிகளுக்கு வளமையை உருவாக்குவதையே நோக்கமாக கொண்டுள்ளது. கிராம மக்கள் ஒன்று சேர்ந்து குழுக்களை அமைத்தனர். ஒவ்வொரு குழுவும் அரிசி, பருப்பு, எண்ணெண், வேகவைத்த உணவுகள், காய்கறிகள், தாணியங்கள், சோப்பு வகைகள், சலவைத்தூள், துணிகள் முதலியன போன்ற பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்தனர். அவர்கள் தங்கள் சொந்த உற்பத்தியை உபயோகப் படுத்துவார்கள். தேவைப்பட்டால், மற்ற கிராமங்களின் உற்பத்தியையும் பயன்படுத்துவார்கள். இப்பணம் கிராமங்களுக்கு இடையே சுழன்று இப்பகுதியை விட்டு வெளியேறாது. ஏனென்றால் அது குழுவிற்குள் மீண்டும் முதலீடு செய்யப்படும்.

இந்த வலையமைப்பில் உள்ள கிராமங்கள் பொருளாதார ரீதியாக ஒருவருக்கொருவர் ஆதரவு தருகின்றனர். அதிகமான உற்பத்தி இருந்தால், அதை வெளி உலகில் பணத்திற்காக அவர்கள் பகிர்ந்துகொள்ளலாம். அத்தகைய ஒவ்வொரு வலையமைப்பிலும் 50000 முதல் 60000 மக்களை கொண்ட 15 – 20கிராமங்கள் உள்ளன. இப்போதைக்கு வலையமைப்பு பொருளாதாரம் இன்னும் திட்டமிடுதலில் உள்ளது.

## சவால்கள்

கூத்தம்பாக்கம், சென்னைக்கு மிக அருகாமையில் உள்ளதாலும், அது மிக வேகமாக வளர்ந்து வருகிறதாலும், இது சமூக, கலாச்சார சுற்றுச்சூழல் மற்றும்

பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. கூத்தம்பாக்கத்தின் புறநகர் பகுதிகளில் பல மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் வந்துள்ளன. சென்னையின் வளர்ச்சிக்காரணமாக கூத்தம்பாக்கத்தில் உள்ள விவசாயம் குறைந்து வருகின்றது. 10 ஆண்டுகளில் கூத்தம்பாக்கத்தில் உள்ள வேளாண்மை மறைந்துவிடும். வலையமைப்பு பொருளாதாரம் மற்றும் உள்ளூர் சாகுபடியின் முக்கியத்துவத்தை மக்களுக்கு கற்பிக்கும் போது தான் இந்த பிரச்சினையை தீர்க்கமுடியும்.

சென்னையில் உள்ள பல தொழிற்சாலைகளில் கிராமத்தில் உள்ளவர்கள் வேலை செய்கின்றனர். இது கிராமத்தில் உள்ள ஒற்றுமையை குறைத்து வலையமைப்பு பொருளாதாரத்தை பாதிக்கும். வேலைவாய்ப்பு, ஓய்வூதியம், உயர் சம்பளம், முதலியன காரணமாக சென்னையில் உள்ள இந்த தொழிற்சாலை பணிகள் கிராமபுற மக்களுக்கு கவர்ச்சிகரமாக உள்ளது. இளங்கோ மற்றும் அறக்கட்டளை எதிர்கொள்ளும் பெரிய சவால்களில் ஒன்று, கிராமத்தின் வேலைகளில் தங்கியிருக்க மக்களை எவ்வாறு ஊாக்குவிப்பது என்பது தான்.

2007ல் ஒரு திடக்கழிவு மேலாண்மை ஆலையை தொடங்க ஒரு திட்டம் இருந்தது. கூத்தம்பாக்கத்தில், 100 ஏக்கர் பரப்பளவில் உள்ள நிலத்தில் கழிவு பொருட்களை குவிப்பதற்காக அருகில் உள்ள பல கிராமங்கள் திட்டமிட்டன. எனினும், கூத்தம்பாக்கத்தில் உள்ள கிராமசபை இதற்கு எதிராக வாக்கு அளித்தது. செம்பரபாக்கம் ஏரி அருகே கழிவு பொருட்களை கொட்ட திட்டமிட்டதினால் அதற்கு எதிராக 2009ல் கூத்தம்பாக்கத்தில் கிராம மக்கள் ஒரு வழக்கை தாக்கல் செய்தனர். ஆரம்பத்தில் அதிகாரிகள் கிராம வாசிகளுடன் உடன்படவில்லை. விரைவில், சுற்றுச்சூழல் வள்ளுநர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இந்த திட்டத்தை மதிப்பிட்டு, அது எவ்வளவு ஆபத்தானது என்பதை உணர்ந்தனர். தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் இந்த திட்டத்தின் முடிவை இன்னும் நிலுவையில் வைத்துள்ளது.

## முடிவுரை

கூத்தம்பாக்கத்தில், முதலில் பிரச்சினைகளை அடையாளம் கண்டு கொள்வதில் முன்னேற்றம் ஆரம்பித்தது. மக்கள் பங்கு மற்றும் வழக்கமான பேச்சுவார்த்தையால் பல நல்ல முடிவுகளுக்கு வழிவகுத்தது :

- சமத்துவபுரம் வீட்டு அமைப்பு திட்டம்
- பஞ்சாயத்து கழகம்
- அறக்கட்டளையின் வெளிப்படையான செயல்பாடு
- சட்டவிரோதமான மதுவை தடை செய்தல்
- சுற்றுச்சூழலை பாதுகாத்தல் மற்றும் கழிவு பொருட்களை குவிப்பதற்கு எதிரான கூட்டு எதிர்ப்பு.

வன்முறை, சாதி கொடுமை மற்றும் நகர்புற குடியேற்றத்தை முற்றிலும் தடுத்து நிறுத்துவதில் பஞ்சாயத்து வெற்றி பெற்றது. கிராமங்களுக்கு வெளியில் திருமணம் செய்து கொண்ட பெண்களும் தங்கள் குடும்பங்களுடன் திரும்ப கிராமத்திற்கு வர ஆரம்பித்தனர். பஞ்சாயத்து கழகத்தினால், பல கிராம மக்கள், உள்ளூர் மற்றும் தேசிய அரசியலில் அதிக நம்பிக்கையுடன் பங்கு பெற்றார்கள். கிராமபுறத்தில் மக்கள் தங்களை தாங்களே ஆளுமை செய்யும்போது உண்மையான ஜனநாயகம் உருவாகின்றது. இது ஒரு நல்ல கிராமிய பொருளாதாரத்தை உருவாக்க உதவுகின்றது. எந்த ஒரு கிராமங்களும் தாங்களே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி ஊழலை ஒழிக்க இயலாது. இருப்பினும், பலகிராமங்கள் ஒன்றாக இணைந்தால் வெற்றி மற்றும் முன்னேற்றம் அடைய முடியும். கூத்தம்பாக்கம் ஒரு ஆரம்பமே. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதற்கு கூத்தம்பாக்கம் ஒரு உதாரணம்.